V7T

www.freetnbooks.com

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - 2025

-----

வகுப்பு 7

காலஅளவு: 2.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 60

## பகுதி - 1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4×1=4**

1) பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ...............

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி

2) தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று .............

அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

3) 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........

அ) யா+எனின் ஆ) யாது+தெனின் இ) யா+தெனின் ஈ) யாது+எனின்

4) இந்த .......... முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு

அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக** **2×1=2**

5) காற்றின் உதவியால் செலுத்தப்படுபவை .......... கப்பல்கள் எனப்பட்டன

6) உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளிவீசும் விளக்கினைக் கொண்ட அமைப்பு ........... ஆகும்

**இ) பொருத்துக** **4×1=4**

7) மீகாமன் - வினைப்பகுபதம்

8) வாழ்ந்தான் - நனி

9) காந்த ஊசி - கப்பலைச் செலுத்துபவர்

10) உரிப்பகாப்பதம் - திசைகாட்டும் கருவி

## பகுதி - 2

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (எவையேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** **5×2=10**

11) மொழியின் இரு வடிவங்கள் யாவை?

12) தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக

13) மகரக்குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக

14) வாழும் நெறி யாது?

15) பகத்சிங் கண்ட கனவு யாது?

16) முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக

17) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்)** **3×4=12**

18) 'எங்கள் தமிழ்' என்னும் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக

19) பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.

20) நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் ராஜமார்த்தாண்டன் கூறுவன யாவை?

21) தற்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக

22) நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்பு பற்றி எழுதுக

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com


## பகுதி - 3

**ஊ) மனப்பாடப்பகுதி (அடிபிறழாமல் எழுதுக)** **4+2=6**

23) 'பச்சை' எனத் தொடங்கும் காடு பாடலை எழுதுக

24) 'இயற்றலும்' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

## பகுதி - 4

**எ) எவையேனும் ஐந்து வினாக்கள் மட்டும் விடையளி** **5×2=10**

25) **பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக**

அ) பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து ............

ஆ) பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு ...........

26) **இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக**

அ) நீ அறிந்ததைப் பிறருக்குச் ...........

ஆ) எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது ...........

27) **தொகைச் சொற்களை விரித்து எழுதுக**

அ) இருதிணை -

ஆ) முக்கனி -

28) **படிப்போம் : பயன்படுத்துவோம்!**

அ) Natural Resource -

ஆ) Unity -

29) உன் பொறுப்புகள் இரண்டு எழுதுக

30) **இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக**

அ) புல் தின்றது -

ஆ) பாடல் பாடினாள் -

31) **கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக**

அ) நான் படிக்கும் வகுப்பு .............

ஆ) தமிழ் இலக்கணம் ............. வகைப்படும்

## பகுதி - 5

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க** **1×6=6**

32) பாடப்பகுதிப் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக

33) எவையேனும் மூன்று வனவிலங்குகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க** **1×6=6**

34) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக

35) **கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

நான் விரும்பும் தலைவர்

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner